Y.M.CA

முரசொலி

பக்கங்கள் நான்கு　　விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 255 ஆங்கீரச ஆவணி 01 (17.08.1992) திங்கள்

● எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

அதிகரிக்கும்பாதுகாப்புசெலவு முழுமக்களையும் பாதிக்கிறது

வடக்கு கிழக்கில் ஸ்ரீலங்கா அரசின் தேவையற்ற யுத்தத்தைத்தொடர்வதால் அதிகரிக்கும் பாதுகாப்பு செலவினங்களின் பளு நாட்டின் முழு மக்களையும் அழுத்துகிறது இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் போர் தொடருவது மக்களை பட்டினி நிலைக்கே தள்ளும் இவ்வாறு அண்மையில் எதிர்க்கட்சிகள் நடத்திய கூட்டம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. சுதந்திரக்கட்சி சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகள் —04 ஆம் பக்கம் பார்க்க

கிழக்குப்பகுதி இராணுவ படைப்பிரிவுகள் தற்காப்பு யுத்தத்தில் இனி ஈடுபடுமாம்

கிழக்குப் பிராந்திய யுத்த முனையில் இனி ஸ்ரீலங்கா இராணுவத்தினர் புதிய தாக்குதல் நடவடிக்கைகளை கைவிட்டு தற்காப்பு முயற்சியில் இறங்க முடிவெடுத்துள்ளனர் என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. இதற்கு இராணுவத்தினர் தற்போது நிலைகொண்டுள்ள பகுதிகளில் தமது நிலைகளை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் இறங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கிழக்கில் புலிகளின் தாக்குதல் அதிகரித்து வருவதாலும், கிழக்குப்பகுதியில் தற்போது படைச்சிப்பாய்களின் பற்றாக்குறையினாலும் இராணுவ சேர்ந்து நடவடிக்கைகளையும் குறைக்க திட்டமிட்டுள்ளனர். கடந்த மாத இறுதியில் கிழக்கில் இராணுவத்தினர் மீது புலிகளின் அதிரடிகள் அதிகரித்து வருவதையடுத்து இங்கு படையினரின் போர் நடவடிக்கையில் மாற்றம் செய்யப்படும் என இராணுவப்பேச்சாளர் செய்தியாளர் மாநாட்டில் கூறியிருந்தமை நினைவிருக்கலாம்.

வட, கிழக்கு போர் தொடரவேண்டும்

படையினரிடையே ரணில் உரை!

புதிய அதிகாரிகள் தமது முழுஆற்றலையும் பயன்படுத்துவர் என ஹமில்டன் நம்பிக்கை

“வடக்கு — கிழக்கில் நிகழும் போரில் வெற்றிவாகை சூடவேண்டும். ஊர்காவற்றுறையில் மரணமான இராணுவ அதிகாரிகளுக்கு அளிககப்படும் பெரும் கௌரவம் இதுவாக இருக்கும்”.

இவ்வாறு கைத்தொழில், விஞ்ஞானத் தொழில்துறை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படைத் தலைமைபதத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுடன் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பகுதிகளுக்கு அவர் நேற்று முன்தினம் விஜயம் செய்ததாகவும் அப்போதே இக்கருத்தை அவர் வெளியிட்டார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வடமாகாணத்தின் புதிய தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா, யாழ்ப்பாணத் தளபதி பிரிகேடியர் றோகான் தலுவத்த ஆகியோர் பலாலி இராணுவ முகாமில் அமைச்சரை வரவேற்றனர். பலாலியில் பாதுகாப்புப் படையினர் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் “மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோரது எதிர்பாராத மரணங்களையிட்டு தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார். — 4ஆம் பக்கம் பார்க்க

★ இராணுவப் பேச்சாளர் தகவல்

உயரதிகாரிகளின் மரணம் தாக்குதல் தாமதப்படுகிறது

“யாழ்ப்பாணம் மீதான இறுதித் தாக்குதல் திட்டம் ஏற்கனவே தயாராகிவிட்டது. உயர் இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தாமதமாகிறது”

இவ்வாறு இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார். இதே வேளை கடந்த வாரம் செய்தியாளர் மாநாட்டில் பேசிய முனசிங்க வடக்குக் கிழக்கில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை நடைபெறுவதாக தெரிவித்திருந்தார்.

அப்போது செய்தியாளர்கள் அவரை நோக்கி “அப்படிப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை எங்கு எத்திகதிகளில் நடைபெற்றது” எனக் கேட்டனர்

இதற்கு பதிலளிக்க கேணல் முனசிங்க மறுத்து விட்டார்.

தாக்குதல் திட்டங்கள் குறித்து புதிய அதிகாரிகள் ஆலோசனை

யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் குறித்து புதிதாக நியமனமான படை அதிகாரிகள் கலந்தாலோசனை நடத்தியுள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

மரணமான அதிகாரிகளின் திட்டம் குறித்தும் தமது புதிய திட்டம் குறித்தும் இவர்கள் விரிவாக ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா, யாழ் மாவட்டத் தளபதி பிரிகேடியர் ரோகண தலுவத்த, கிழக்குப் பிராந்தியத் தளபதி லக்கி அல்கம உட்பட பல அதிகாரிகள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

காடு அழியின்
நாடு அழியும்

ஹெலியிலிருந்து கிரனேட் வீச்சு வீதியில் வந்த மாணவன் படுகாயம்

பண்டத்தரிப்பு - சில்லாலை மக்கள் குடியிருப்புப் பகுதிகளை வட்டமிட்ட ஹெலிக்கொப்ரர் நேற்றுக்காலை 10 மணியளவில் கிரனேட்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதில் வீதியால் வந்து கொண்டிருந்த மாணவன் பலத்த காயத்திற்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பு சில்லாலை நல்லாயன் வீதியைச் சேர்ந்த விக்ரர் யூட் ஜெனிஸ்ரன்(15) என்ற மாணவனே காயப்பட்டவராவார்.

கிரனேட் சிதறல்களால் அவ்வீதியால் வந்து கொண்டிருந்தவர்களில் சிலர் சிறுகாயங்களுக்குள்ளாகினர். (07, 22)

படையினர் குண்டுவைத்து தெல்லிப்பழையில் வீடுகள் சேதம்

தெல்லிப்பழை கிழக்குப் பகுதி செல்வநாயகம் வீதியில் படையினர் 30க்கு மேற்பட்ட வீடுகளை குண்டு வைத்து தகர்த்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். மற்றும் மதில்கள், வேலிகள் யாவும் கொழுத்தப்பட்டும். சேதப்படுத்தப்பட்டுமுள்ளன.

அம்பனைப் பகுதி தோட்டப் பயிர்ச் செய்கையினை முற்றிலும் நாசப்படுத்தியுமுள்ளனர். வாழைகளை முற்றாக அழித்துமுள்ளனராம். 07

மண்டைதீவிலிருந்து படையினர் தொடர்ச்சியான கலிபர்த் தாக்கு

மண்டைதீவில் நிலை கொண்டிருக்கும் படையினர் நேற்றுக்காலை, பகல், மாலை நேர வேளைகளில் யாழ். நகர்க்கரையோரக் குடியிருப்புகளை நோக்கி 50 கலிபர்த் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

மீன்பிடித் தொழிலை நேற்றுக் காலை யாழ்ப்பாணக் கரையோரப் பகுதியில் செய்து கொண்டிருந்தபோது மீனவர்களை நோக்கி படையினர் 50 கலிபர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

மாலை 6 மணியளவிலும் படையினரால் யாழ் கொட்டடிப் பகுதிக் கரையினை நோக்கியே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது 07

மிதிவெடியில் சிக்கி இளைஞர் பாதம் இழப்பு

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக் கருகில் தனது வீட்டுப் பொருள்களை எடுத்துக் கொண்டு திரும்பிய ஒரு இளைஞர் மிதிவெடியில் சிக்கி தனது பாதத்தை இழந்தார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் அளவெட்டி அகதிகள் முகாமில் தற்போது தங்கியிருக்கும் இளையான் மூர்த்தி (18) என்பவரே பாதத்தை இழந்தவராவார். 07

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் 1992

கந்தசுவாமியின் முச்சத்திகள்

ஆண், பெண், அலி. என்னும் மூன்றுமல்லாத அநாதி மலமுத்த பதியாகிய சிவத்தையே. சர்வாத்மாக்களையும் தோற்றுவித்தலால் ஆண்பாற் படுத்துப் பிதாவெனவும். சூரியனுக்குக் கிரணம்போல அச்சிவத்துக்கு அபின்னமாயுள்ள சத்தியையே நிமித்த காரணமாகிய அச்சிவம் அத்தொழிலியற்றுதற்குத் துணைக்காரணமாயிருத்தலால் பெண்பாற்படுத்தி மாதாவெனவும். அச்சிவம் அச்சத்தியோடு கூடி உத்தியோகித்துச் சங்கற்பித்தலையே அவ்வான்மாக்களது காரணத் தொழிலாமையால். உகந்து புணர்தலெனவும் அச்சங்கற்பம் இன்மையே பிரிதல் எனவும் சொல்லியதென்றறிக.

தேனமர் கமலத் தண்ணல்
செய்தொழில் முற்று மாற்றால்
ஆனதன் அருளை ஆங்கோர்
ஆயிழை ஆக நல்கி

கந்தபுராணம் - உத்தரப்படலம்

இனி அக்கினி சத்தி ஒன்றாய வழியும் சுடப்படுவதும் விளக்கப்படுவதும் அடப்படுவதுமாகிய விஷயத்தில் சூடு, விளக்கம், அடுதலாகிய தொழிலினால் பலவாதல் போல, கந்தசுவாமியினது சத்தி ஒன்றாய வழியும் கிருத்திய பேதத்தால் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியென மூவகைப்படும், அவற்றுள் இச்சாசத்தியாவது ஆன்மாக்களை முத்தியிலடைக்க விரும்புதல், ஞானசத்தியாவது அவ்வான்மாக்களுடைய கன்மங்களையும் அக்கன்மங்களுக்கீடாகிய தனு கரண புவன போகங்களையும் உபாதானத்தினின்றும் (துணைக்காரணமாகிய மூன்று) தோற்றுவிக்கும் முறைமையை அறிதல். கிரியாசத்தியாவது அவ்வான்மாக்களுக்குக் கர்மசமத்துவம் (இருவினை ஒப்பு) பிறப்பிக்கும் பொருட்டுக் கன்மங்களைப் பக்குவ அபக்குவம் அறிந்து (தகுதி தகுதியின்மை) அறிந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைவித்தல். கந்தசுவாமிக்கு இம்மூன்று சத்திகளும் புராணங்களிலே முறையே வள்ளியம்மை, வேலாயுதம், தெய்வயானையம்மையெனக் கூறப்பட்டன,

(ஆதாரம்: சுப்பிரபோதம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்)

இன்றைய தெய்வீக இசையரங்கு

சிறிமுருகன் தண்ணீர்ப் பந்தல்

மாலை 6.00 - இரவு 8.00

மங்கள இசை

தவில்	நாதஸ்வரம்
கே நித்தியானந்தன்	வி. கே கானமூர்த்தி
பி முருகதாஸ்	வி. கே, பஞ்சமூர்த்தி
பி கணேசன்	பி. ரஜீந்திரன்
ஆர் பாஸ்கரன்	

வீரப்பனைப் பிடிக்க இராணுவம் பங்காரப்பா தீர்மானம்!

நீண்ட காலமாக பொலிஸாரின் பிடியில் சிக்காமல் தப்பித்துவரும் சந்தன மரக் கடத்தல் காரனான வீரப்பனைப் பிடிக்க இராணுவத்தை அழைத்து அதன் உதவியை நாடுவதென கர்நாடக அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் வீரப்பன் கோஷ்டியால் சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து பொலிஸாரில் ஒருவரான மைசூர் பொலிஸ் சுப்பிரீண்டனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டபின் பெங்களூரில் செய்தியாளரிடம் பேசுகையில் கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பா இத்தகவலை வெளியிட்டார்.

வீரப்பன் கோஷ்டியினர் 15 பொலிஸார் உட்பட பலரை இதுவரை கொலை செய்துள்ளனர் என்று கூறிய அவர் இனியும் இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது மத்திய அரசின் உதவியுடன் இராணுவம் அழைக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

கிழக்கின் புதிய இராணுவ தளபதி அறிவிப்பு

“சட்டம், ஒழுங்கை) ஏனைய சீர்குலைக்க முயன்றால் எனது கடமையைச் செய்து அவ்வாறானோரின் சவாலை எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்”

இவ்வாறு கிழக்குப் பிராந்தியத் தளபதியாகப் பதவியேற்றுச் செல்லும் மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தெரிவித்ததாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்று வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தில் முப்பது வருடங்களாகச் சேவையாற்றும் இவர் ஜே. வி. பி. ஒழிப்பு நடவடிக்கையில் முக்கிய பொறுப்பை வகித்தார் என்றும் ஜே. வி. பி. ஒழிப்பு நடவடிக்கைக்கென அமைக்கப்பட்ட பாதுகாப்புப் படையின் இணைந்த சேவைத் தலைவராகவும் இவர் செயற்பட்டார் என்றும் இச் செய்தியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பின்மையால் கிழக்கில் பணிபுரிய டாக்டர்கள் பீதி!

கிழக்கு மாகாணத்தில் டாக்டர்கள் பற்றாக்குறை அதிகரித்து வருவதனால் ஓய்வுபெற்ற டாக்டர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளில் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திலிருந்து இந் நியமனங்கள் இடம்பெறும் என்றும் இம் மாவட்டங்களுக்கு வேறு மாவட்டங்களிலிருந்து வந்து டாக்டர்கள் பணிபுரிய முன்வருவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது

பாதுகாப்பு தொடர்பான அச்சமே இதற்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

● கனத்தை அசம்பாவிதம்

அரசு மீதான பொறாமையின் விளைவே என்கிறார் ஜனாதிபதி

“எதிர்க்கட்சியினர் நாட்டுக்குள் பிரச்சினையை உருவாக்க முயற்சி செய்து வருகிறார்கள்” என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ கரந்தெனியாவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் குற்றம் சுமத்தினார்.

“அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதுதான் எதிர்க்கட்சிகளுக்குத் தெரிந்த வழி பயங்கரவாதம் நாட்டில் தலைவிரித்தாடிய காலத்தில் எதிர்க்கட்சியினரை அரசாங்கமே பாதுகாத்தது அரசாங்கத்தின் கொள்கைகளை மக்கள் ஆதரிக்கின்றனர்” என்று கூறிய அவர் கனத்தை அசம்பாவிதம் பற்றி பிரஸ்தாபிக்கையில் அவர்கள் ஆத்மசாந்தி பெறவேண்டும் என்று கூறவேண்டிய வேளையில் குறிப்பிட்ட சிலர் தாம் வெற்றி பெறவேண்டும் என பதற்றமாகக் கூச்சலிட்டனர் என்று சொன்னார்.

‘பொறாமை காரணமாகவே இவர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர்’ என்றும் ஜனாதிபதி கூறினார்.

★ ஹெக்டர் கொப்பேகடுவவை

எதிர்த்தோர் டென்சில் மீது பரிவு காட்டுவது வியப்பு- ஒஸி

‘தோட்டங்களின் சொத்துரிமையை மக்களிடம் வழங்கிய ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு எதிராக 1982 ஆம் வருடம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது இயக்கம் நடத்தியவர்கள் அவரது அண்ணன் மகனான டென்சில் கொப்பேகடுவ மீது பரிவு காட்டுவது வியப்பைத் தருகிறது’

இவ்வாறு கரந்தெனியாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் சபையின் மேல் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஒஸி அபயகுணசேகர கூறினார்.

★ மக்கள் மய டிப்போக்கள்

சுய விருப்பு ஓய்வுக்கென புதிய திட்டம் அறிவிப்பு

மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் டிப்போக்களில் மேலதிகமாக உள்ள ஊழியர்கள் தமது சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறுவதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

இப் புதிய திட்டத்தின் கீழ் ஓய்வு பெறுவோருக்கு 50 மாத சம்பளம் வழங்கப்படவுள்ளது

சாரதிகள். மெக்கானிக்குகள், மின்னியலாளர்கள் இத் திட்டத்தின் கீழ் வரமாட்டார்கள்.

பரீட்சை வேளையில்

திருட்டு

க. பொ. த. (உ. த.) பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த போது பரீட்சார்த்திகளின் சைக்கிள்களில் உள்ள டைனமோவை திருடிய சம்பவம் நிகழ்ந்துள்ளது

யாழ் நகரில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றில் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த போது பரீட்சை எழுதவந்தவர் போல நடித்து டைனமோவைக் கழட்டுகின்ற போது மேல்மாடியில் இருந்து இதை அவதானித்த மேற்பார்வையாளர் கீழே வருமுன் திருடன் டைனமோவுடன் ஓடிவிட்டதாக தெரியவருகிறது. 49

உபகரணங்கள் மீட்பு

கல்முனைக் கடற்பகுதியில் இராணுவ தாக்குதல் காரணமாக குருநகர் மீனவர்களால் கைவிடப்பட்டு விடப்பட்ட மீன்பிடி வலைகளில் சில இப்பகுதியில் இருந்து சென்ற மீனவர்களினால் மீட்டு கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இதேசமயம் இராணுவம் சில மீனவர்களின் வலைகளையும், மீன்பிடி உபகரணங்களையும் எடுத்துச் சென்றனதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 12

கூடுதலானோர்

விண்ணப்பம்

1992 ஆம் ஆண்டிற்கான வட இலங்கை நுண்கலை மன்ற தேர்வுகளுக்கு இம்முறை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுகளிலும் பார்க்க இவ்வாண்டு மூன்று மடங்கினர். இத் தேர்வுகளுக்கு விண்ணப்பித்துள்ளனர். 47

ஒன்று கூடல்

தீவக மாவீரர் செயற்பாட்டுக் குழு உறுப்பினர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ் நல்லூரில் உள்ள தீவக மாவீரர் செயலகத்தில் நடைபெறவுள்ளது.15

வண்ணை பெருமாள்

தேவஸ்தானத்தில்...

வண்ணை - ஸ்ரீவெங்கடேச வரதராஜ பெருமான் தேவஸ்தானத்தில் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது

அன்று மாலை 4 30 மணி முதல் இரவு 8 00 மணிவரை விசேட ஸ்நபன அபிஷேகமும் சகஸ்ர அர்ச்சனையும் நடைபெறும்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

பொதுசன நூலக அபிவிருத்தி

யாழ் மாநகர நூலகத்தின் நூல்வளத்தைக் கணிசமான அளவு அதிகரிக்கும் பொருட்டு. போதியளவு நூல்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக பொதுமக்கள் சிபார்சு செய்யும் நூல்களுக்கு முன்னுரிமை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது

ஆகவே, மாநகர எல்லைக்குள்ளும், அப்பாலும் வதியும் அறிஞர்கள். கல்விமான்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள், பொதுத் தாபனங்கள். திணைக்களங்கள் ஆகியவற்றைச் சார்ந்தவர்களிடமிருந்தும். நூலக வாசகர்களிடமிருந்தும், அவர்கள் விரும்பும் நூல்கள் தொடர்பான பூரண விபரங்களை (புத்தகத்தின் பெயர், எழுதியவர் பெயர், பிரசுரிப்பாளர்) உள்ளடக்கிய பட்டியல்களை 20.08.92 வியாழக்கிழமைக்கு முன்பதாக எனக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
14-08-1992.

08027

★ சுவிஸ் அதிகாரி அறிவிப்பு

இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்!

இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு பலவந்தமாகவென்றாலும் நஷ்டஈட்டுடன் அனுப்பி வைப்பதென்ற சுவிட்சர்லாந்து அரசாங்கத்தின் இறுக்கமான போக்கில் இப்போது தளர்வு ஏற்பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி அகதிகள் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்று சுவிஸ் தூதரகப் பொறுப்பதிகாரி நேற்று முன்தினம் தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சுவிஸில் உள்ள 30 ஆயிரம் இலங்கை தமிழ் அகதிகள் படிப்படியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்று தூதர் சமீபத்தில் கூறியிருந்தது நினைவிருக்கலாம்.

ஓவியசிற்பகண்காட்சி யாழ். கல்வி திணைக்களம் நடவடிக்கை

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான ஓவிய சிற்பக் காட்சியும் கோட்ட மட்டங்களில் தெரிந்து எடுக்கப்பட்ட மாணவர்களின் ஆக்கங்களும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி காண்பிக்கப்படவுள்ளன.

இவற்றை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வளவினுள் அமைக்கப்பட்டிருக்கும் கலாபவனத்தில் காட்சிக்குவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (47)

சுன்னாகம் ஸ்கந்தா திடலில நிகழ்ந்து வரும் போட்டிகள்

விளையாட்டுத்துறை அமைச்சினால் யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு சாம்பியன்கள் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இப்பொழுது நடைபெற்று வருகிறது.

இப்போட்டித் தொடரில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சாம்பியன் சென் அந்தனீஸ அணியை எதிர்த்து உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி ஆடியது.

ஆனால் ஆட்டம் ஆரம்பமாகி ஒரு சில நிமிடங்களில் உடுவில் அணியில் அப்பிரதேசத்தை சேராத ஒரு வீரர் ஆடுவதை அவதானித்த போட்டிக்குழுவினர் ஆட்டத்தை இடைநிறுத்தி யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிக்கு வெற்றியைக் கொடுத்தனர்; 16

ச. ச. நிலைய நன்கொடைப்பணம்

வலி- தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப- அலுவலகப் பகுதியிலுள்ள பத்து சன சமூக நிலையங்களுக்குக் கடந்த 1991 ஆம் ஆண்டுக்கான உதவி நன்கொடைப் பணம் பெறுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

உப- விதிகளின் படி சரியான முறையில் செயற்படாத நான்கு சனசமூக நிலையங்களுக்கு உதவி நன்கொடைப் பணம் பெறுவதற்கான சிபாரிசு செய்யப்படவில்லை என்று தெரியவருகின்றது.

சிபாரிசு செய்யப்பட்ட மேற்படி பத்து சன சமூக நிலையங்களுக்கும் வலி தென்மேற்கு பிரதேச சபை விரைவில் இதற்கான காசோலைகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 13

வளர்ந்தோர்கல்வித்திட்டத்தின்கீழ்..

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் ஆங்கில மொழி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

பாடசாலையை விட்டு விலகிய மாணவ மாணவிகள் இந்த இலவச ஆங்கில வகுப்புகளுக்குச் சமுகம் தந்து தங்கள் ஆங்கில கல்வி அறிவை விருத்தி செய்துகொள்வது நல்ல சந்தர்ப்பம் என்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார் 13

திருநகர் அணி வெற்றி

முன்னாள் பொருளாளர் அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் நினைவாக நடத்தப்பட்டு வரும் 7 வீரர்கள் மாத்திரம் பங்கு பற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இடம் பெற்ற ஆட்டத்தில் திருநகர் பாரதி 'பி' பிரிவு அணி வெற்றி பெற்றது.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் பாரதி விளையாட்டுக் கழக 'பி' பிரிவு அணி தன்னை எதிர்த்தாடிய கொழும்புத்துறை ஜெற்லையின்ஸ விளையாட்டுக்கழக அணியை 2:1 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது. நடுவராக எம். நரேந்திரன் கடமையாற்றினார் 16

★ 'நியூயோர்க் ரைம்ஸ்' தகவல்

ஈராக் மீது அமெ. பலாத்காரம் பிரயோகிக்கும் நிலை உண்டு

ஈராக்கின் இரசாயன ஆயுதங்களைக் கண்டறிவதற்கான இழுபறியில் அமெரிக்கா பலாத்காரத்தை பிரயோகிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தனது நேச நாடுகளின் உதவியுடன் ஈராக் மீதான பகைமையை தீர்த்தே தீரும் எனும் சந்தேகம் உண்டென்று பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரிகள் சிலரை மேற்கோள் காட்டி. இச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கட்டடங்களை அமெரிக்கா குண்டு வீசித் தாக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரசாயன ஆயுதங்களைக் கண்டறியும் விவகாரத்தில் ஈராக் விட்டுக் கொடுக்காத போக்கைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். விஜயம்

கிறிஸ்தவ சிறுவர் நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி செல்வி மரியின் வீவர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

கிறிஸ்தவ சிறுவர் நிறுவனத்தின் ஆதரவில் இயங்கிவரும் தர்ம ஸ்தாபனங்களை இவர் நேரடியாகப் பார்வையிட்டுச் சென்றார். (18)

புதிய அதிபர் நியமனம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பப் பிரிவுக்கான புதிய அதிபராக செல்வி செல்வமணி செல்லத்துரை அடுத்த மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இங்கிலாந்து வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் எம் ஏ பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது. (18)

நடவடிக்கை

ஈச்சமோட்டை சன சமூக நிலையத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டு வந்த குழாய் கிணறு. குழாய் 10 அடி நிலத்துக்கு அப்பால் சேதமாகிவிட்டதால் மீண்டும் வேறொரு இடத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (47)

உக்கம் சந்த் மீண்டும் அதிமுக,வில்

தமிழ்நாடு மதுராந்தகம் தொகுதியின் முன்னாள் எம். எல். ஏ உக்கம்சந்த் மீண்டும் அ. தி. மு. க.வில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக முதலமைச்சர் ஜெயலலிதா அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்

மீண்டும் மைதானம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 'பிக்னல்' விளையாட்டு மைதானமும் ஸ்ரேடியமும் மீண்டும் பல வருடங்களுக்குப் பின் பயன்படுத்தப்படுகின்றன

இந்திய படை வந்த காலம் முதல் திரும்பிச் செல்லும் வரை இவை விளையாட்டுக்கு பயன்படுத்தப்படவில்லை

இவ்வாண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த வாரம் இந்த மைதானத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. 18

மதுவின் மூலம் 96 கோடி ரூபா வருவாய்

மதுபானக் கடைகளை ஏலமிட்டதில் தமிழக அரசுக்கு இதுவரை சுமார் 96 கோடி ரூபா வருவாய் கிடைத்துள்ளதாக சென்னைத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

இக் கடைகளை எதிர்த்துத் தமிழகத்தில் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஜெயலலிதா அரசு அதனைப் பொருட்படுத்தவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

கனத்தை அசம்பாவிதம் சுதந்திரக்கட்சி நிலைப்பாடு

கனத்தை மயானத்தில் நிகழ்ந்த அசம்பாவித சம்பவங்களில் சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படும் புகார்கள் குறித்து விசாரணை செய்யப்படவேண்டுமென கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் பலர் வற்புறுத்தியுள்ளனர்.

இவ்வாறு நேற்று வெளியான கொழும்பு நாளிதழ் செய்தியொன்று தெரிவிக்கிறது.

இதற்கிடையில் மேற்படி சம்பவம் கேவலமானது என கட்சியின் நியமன எம்பியும் முன்னாள் சுப்ரீம்கோர்ட் நீதியரசருமான ரீ. டபிள்யூ. ராஜரத்தினம் கண்டித்துள்ளார் என்றும் இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 19 லட்சத்து 74 ஆயிரம்பேருக்கு வேலையில்லை

இந்தியாவில் மொத்தம் ஒரு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் பேருக்கு வேலையில்லை என்று அரசு தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

இவர்களில் தமிழகத்தைச் சேர்ந்தோர் மாத்திரம் பத்தொன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரம் என்பது குறிப்பிடத்தக்கது.

3 பிரிட்டிஷ் பிரஜைகளை வெளியேற ஈராக் உத்தரவு

ஈரானிய அரசாங்கம் பிரிட்டிஷ் தூதரக ஊழியர் ஒருவர் உட்பட மூன்று பிரிட்டிஷாரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டது.

சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவார காலத்துக்குள் இவர்கள் வெளியேற வேண்டும் என்று ஈரானிய வெளிநாட்டமைச்சு பிரிட்டிஷ் தூதரக பொறுப்பதிகாரிக்குத் தெரிவித்துள்ளது.

ராமர் கோயில் கட்டியே தீருவோம் என்கிறார் அத்வானி

அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் விடயத்தில் எமது கட்சி உறுதியாக உள்ளது. கோயிலைக் கட்டியே தீருவோம் என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி கூறினார்.

ஒரிசாவில் நிகழ்ந்த கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர் இவ் விடயத்தில் சகல கட்சிகளும் தமது நிலையைத் தெளிவுபடுத்தவேண்டும் என்றும் அவர் கூறினார்.

"இந்தியா அந்நிய படைகளை நம்பியிருக்கும் நிலை நீடிக்கக்கூடாது என்றும் அவர் சொன்னார்.

வாஷிங்டனில் சமரசப்பேச்சு ப.வி. இயக்கம் நிபந்தனை

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு பிரதேசங்களில் யூதர் குடியேற்றம் பற்றிய அமெரிக்கா தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டும் என்று பலஸ்தீனிய விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு அமெரிக்கா தனது நிலையைத் தெளிவுபடுத்தினாலே வாஷிங்டனில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முடியும் என்றும் அது கூறியுள்ளது.

★ கலைஞர் உடல்நிலை பற்றி

தவறான வதந்தியால் சென்னையில் கலவரம் மூண்டது

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதியின் உடல்நிலை குறித்து சென்னையிலும் மாநிலத்தின் மற்றும் சில முக்கிய நகரங்களிலும் தவறான வதந்தி பரப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து சென்னையின் சில பகுதியில் கலவரங்கள் ஏற்பட்டதாகவும் எனினும் அவை பாரதூரமானவையாக அமையவில்லை என்றும் நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

ஆர். விக்கு அரசு பங்களா எதிர்த்து தி.க.மறியல்

முன்னாள் இந்திய ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமனுக்கு அரசு பங்களா ஒன்று சென்னையில் ஒதுக்கப்படுவதைக் கண்டித்து திராவிடர் கழகத்தினர் இருநூறு பேர் மறியல் செய்தனர்.

அவருக்கு சென்னையிலேயே சொந்தமாக இரு பங்களாக்கள் இருக்கும்போது அவருக்குத் தமிழக அரசு தனி பங்களா ஒதுக்குவது சரியல்ல என்று தி.க. எதிர்ப்புத் தெரிவித்துவருகிறது.

அமெ. இறக்குமதியை குறைத்தது

அமெரிக்கா பாகிஸ்தானிலிருந்து ஜவுளி இறக்குமதி செய்வதைக் குறைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெறிமுறைகளை மீறி வர்த்தகத்தில் பாகிஸ்தான் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டியே அமெரிக்கா இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஆப்கானில் மீண்டும்...

ஆப்கானிஸ்தானில் சற்றே தணிந்திருந்த மோதல்கள் மீண்டும் தொடங்கி விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

காபூலில் மீண்டும் கடும் ரொக்கெட் தாக்குதல்கள் நிகழ்ந்து வருவதாகவும் பதற்ற நிலை நிலவுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

அரசியல் பேசாத அதிகாரி டென்சில் கொப்பேகடுவ

நான் அறிந்த வரையில் ஜெனரல் கொப்பேகடுவ ஒருபோதும் நாட்டின் அரசியல் பற்றிப் பேசாத அதிகாரி என இராணுவப் பேச்சாளர் மேஜர் முனசிங்க பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும் கனிஷ்ட அதிகாரிகளின் எதிர்பார்ப்புகளை அறிந்து செயற்பட்ட உயரதிகாரியாகவும் அவர் விளங்கினார் என்றும் மேஜர் முனசிங்க கூறினார்.

நியாய விலையில் அத்தியாவசிய பொருள்கள்

அச்சுவேலி ப.நோ.கூட்டுறவுச் சங்கம் தரமான குத்தரிசி கிலோ 23 ரூபா வீதம் கிளைகளின் மூலம் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்கின்றது.

இதேவேளை அச்சுவேலி அரிசி ஆலைகளில் குத்தரிசி கிலோ 25 ரூபாவுக்கு விற்கப்படுவதாக தெரியவருகின்றது.

இதேபோன்று அத்தியாவசியப் பொருளான சீனி கிலோ 27 ரூபாவுக்கும் மா கிலோ 13/60 க்கும் பாவனையாளர்களுக்கு விற்கப்படுகின்றன.

அச்சுவேலியில் உள்ள தனியார் கடைகளில் சீனிகிலோ 30 ரூபாவுக்கு விற்கப்படுவதாகத் தெரிகிறது, 73

★ எழுதுவினைஞர் பரீட்சை

21 ஆம் திகதிக்குமுன் அனுப்புமாறு அரச அதிபர் அறிவிப்பு

எழுதுவினைஞர் சேவைப் போட்டிப் பரீட்சைக்கு யாழ் மாவட்டத்தில் இருந்து 8665 பேர் யாழ் செயலகத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்,

இந்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் அனைத்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக கப்பலில் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இப்போட்டிப் பரீட்சைக்குரிய திகதி இம்மாதம் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதால் எழுதுவினைஞர் சேவைக்கு விண்ணப்பிப்பவர்கள் இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்பாக அரச அதிபர், செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார், 47

★ அதிகாரிகள் கொலை

தெற்கில் கலவர முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது

இராணுவ உயரதிகாரிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கில் தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர் எனினும் தெற்கில் அவ்வாறு நடைபெறவில்லை.

திட்டமிடப்பட்ட வகையில் வெள்ளவத்தைப் பகுதியில் குழப்பம் ஏற்படுத்த ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது.

இவ்வாறு லக்திவ இணை ஆசிரியர் வினி ஹெற்றி கொட பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

புஷ் ஆதரவு அலை கருத்துக்கணிப்பில் சரிவு

இவ் வருட இறுதியில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோர்ஜ் புஷ்ஷின் வெற்றி வாய்ப்பு குறைவாகவே உள்ளதாக இம்மாத ஆரம்பத்தில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க செய்தி ஊடகம் ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பில் புஷ்ஷிற்கு 34வீத வாக்குக்களும் இவரை எதிர்த்து போட்டியிடும் குடியரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் பில் கிளின்ரன் 60வீத வாக்குகளையும் பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

கொழும்பு நோக்கி குமண நேற்று மாலை புறப்பட்டது

திருகோணமலை சென்றிருந்த குமண கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் கொழும்பு சென்றிருந்த நோயாளர்கள் மற்றும் தீவுப்பகுதியை சேர்ந்த நோயாளர்களும் வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

மீண்டும் இக்கப்பல் நேற்று மாலையே கொழும்பு நோக்கி புறப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன. 47 10

பலாலியில்

அடிக்கடி விமானம்

நேற்று விமானங்கள் ஹெலிகளின் போக்குவரத்து அதிகரித்துக் காணப்பட்டது

இரண்டு ஹெலிக்கொப்டர்களும், அவ்ரோ பயணிகள் விமானங்களும் அடிக்கடி பலாலித் தளத்துக்கு வருவதும் ஒரு சில நிமிடங்களிலேயே திரும்பிச் செல்வதுமாக காணப்பட்டன

காலை 7.30 மணியளவில் 2 குண்டு வீச்சு விமானங்களும் பலாலிப்பக்கமிருந்து வான்பரப்பில் பறந்து சென்றதையும் அவதானிக்க முடிந்தது 73

அதிகரிக்கும்...

இதில் பங்குபற்றின,

அரசின் ஜனசவிய திட்டத்திற்கு 400 கோடி ரூபா நிதியை எங்கிருந்து பெறுவது எனத் தெரியவில்லை என்று ஓர் அரச அதிகாரி குறிப்பிட்டுள்ளார். இலங்கை திரும்பும் அகதிகளுக்கு அரசு 6 கோடி ரூபா நிதியை ஒதுக்குவதாக முன்னர் கூறிய போதும் அது இன்னமும் ஒதுக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

★ படை அதிகாரிகளை கொன்ற குண்டு

புலிகள், தமிழ் குழுக்கள் அல்லாத கொலைக்குழு செயலென சந்தேகம்

வடக்கில் இராணுவத் தளபதிகளைக் கொன்ற குண்டு வைப்பு யாருடைய வேலை என்பது பற்றி இன்னும் தெற்கில் சந்தேகம் நிலவுகிறது.

உண்மையாக தெற்கில் வாழும் மக்களில் அநேகர் இந்த குண்டு வெடிப்பு விடுதலைப் புலிகள் அமைப்பின் செயல் என ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை இந்தச் செயல் வேறு சில குழப்பம் விளைவிக்கும் குழுவின் செயல் என நம்புகின்றனர்.

இவ்வாறு லக்திவ இணை ஆசிரியர் வினி ஹெற்றி கொட பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்த எட்டு அதிகாரிகளும் ஒரு வாகனத்தில் ஏறியதற்கான காரணம் என்ன? என கேள்வி எழும்புகின்றன,

இந்த குண்டு வெடித்த பாதையில் இதற்கு முன்பும் கூடிய பாரம் கொண்ட வாகனங்கள் போக்குவரத்துச் செய்திருந்தும் நான்கு தொன் மட்டும் பாரமுள்ள இந்த லாண்ட்றோவர் வாகனம் செல்லும்போது குண்டு வெடித்தது எப்படி என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஒரு மாதத்திற்கு முன்பு வடக்குக்கு அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் விஜயம் செய்துள்ளனர். உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்களும் விஜயம் செய்துள்ளனர் இவர்கள் இந்தப் பாதையூடாக பயணம் செய்துள்ளனர் எனினும் இந்தக் குண்டு வெடிக்கவில்லை.

எனவே விடுதலைப் புலிகள் அல்லாத வேறு குழுவினரால இந்தக் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்றசந்தேகம்உள்ளது என்றும் திரு ஹெற்றி கொட கூறினார்

இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் இந்த குண்டு வைப்புக்கு உரிமை கோரியிருப்பதை சுட்டிக்காட்டி இதை விளங்கிக் கொள்ள முடியவில்லையெனக் கூறி இந்தச் சந்தேகத்திற்கான காரணத்தை திரு. ஹெற்றி கொடவிடம் கேட்டார்.

மரணச்சடங்குகள் நடாத்தப்பட்ட விதம் பற்றி மக்கள் திருப்தியடையவில்லை சாரி ஜன்ம நல்லதம்பி என்ற நாடக நடிகர் கொல்லப்பட்டபோது சுதந்திர சதுக்கத்தில் தகனம் செய்யப்பட்டதும் அரச கௌரவங்களுடன் நடத்தப்பட்டதும் சாதாரண மயானத்தில் டென்சில் கொப்பேகடுவவின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டதும் மக்கள் மனதில் சந்தேகத்தை உண்டாக்கியது.

அதனால் விடுதலைப் புலிகளோ அல்லது வேறு எந்த தமிழ்க் குழுக்களோ சம்பந்தப்படாமல் வேறு ஒரு கொலைக் குழுவினால் இக்கொலைகள் செய்விக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் உள்ளது என்றும் திரு. வினி ஹெற்றி கொட கூறினார். இந்த அமுக்க கண்ணிவெடி இப்போது விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்டது என்பதை மறைப்பதற்காக பழைய கண்ணிவெடியிலேயே இராணுவ வாகனம் சிக்கியது என பாதுகாப்பு அமைச்சு கூறியதே இவ்வாறான சந்தேகங்கள் எழக்காரணம் என கருதப்படுகிறது.

★ பொருள்கள் எடுக்கச் சென்றோர் மீது

தெல்லிப்பழையில் படையினர் சூடு குடும்பப் பெண் ஸ்தலத்தில் பலி

நேற்றுக்காலை 8 மணியளவில் தெல்லிப்பழை கிழக்கில் இராணுவ நடவடிக்கையினால் இருப்பிடங்களை விட்டு வெளியேறிய மக்களில் சிலர் சொந்த இடங்களுக்குச் சென்று தளபாடப் பொருள்களை எடுத்துக்கொண்டிருக்கையில் தெல்லிப்பழை கிழக்குப் பகுதியில் வீடுகளுக்குள் ஒழித்திருந்த படையினர் கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தை மக்களை நோக்கி மேற்கொண்டபோது இளம் குடும்பப் பெண் ஒருவர் அவ்விடத்திலேயே பலியானார்

மேற்குறிப்பிட்ட இடத்திலிருந்து இடம்பெயர்ந்து சுமலை தெற்கில் வசித்து வருபவரான திருமதி புஷ்பராணி அன்னலிங்கம்(34) என்பவரே பொருள்களை எடுத்துக் கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகினார்.

ஏனையோர் மீதும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாயினும் மறைவான இடங்களை நோக்கி பாதுகாப்புத் தேடிக் கொண்டனர்.

அப்பகுதியை நோக்கி படையினர் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டபோதும் மக்கள் பொருள்கள் எடுப்பதற்குச் சென்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (07)

வட,—

இவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்த யுத்தத்தில் மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா, பிரிகேடியர் தளுவத்த ஆகியோருக்கு அரசின் சகல ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்

கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்ரன் வணசிங்க அங்கு பேசுகையில் 'டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோரின் ஆற்றலைப் பாராட்டியதுடன் யுத்த உபாயங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

புதிய தளபதிகள் இருவரும் வடக்கு கிழக்கு யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கு முழு ஆற்றலையும் பயன்படுத்துவர் என்று அவர் நம்பிக்கையும் வெளியிட்டார்.

அமைச்சர் வசாவிளானில் இராணுவத்தினரின் பயிற்சி நடவடிக்கைகளை அவதானிக்கவும் வனசிங்க, ஜெரிசில்வா, தளுவத்த சகிதம் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டதாகவும் இச்செய்திகள் மேலும் கூறின.

அப்போது அவர் படையினரை உற்சாகப்படுத்தியதாகவும் கூறப்பட்டது.

அமைச்சர் பின்னர் வன்னிப் பகுதிக்குச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

வன்னிப் பிராந்திய பாதுகாப்பு நிலைமையை மேஜர் தெவிந்த கலுபஹண அமைச்சரிடம் விவரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது,

ஈராக் இன்று தாக்கப்படும்? நியூயோர்க் ரைம்ஸ் தகவல்!

இன்று காலை ஈராக்மீது அமெரிக்க விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்தலாம் என நேற்று வெளியான நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக்கின் அணு ஆயுதங்கள் குறித்து தலைநகர் பக்தாதில் தேடுதல் நடத்தி வரும் ஐ.நா கண்காணிப்புக்குழுவினர் ஈராக் இராணுவ கட்டிடத்தை சோதனையிடவுள்ளனர் இதற்கு ஈராக் எதிர்ப்பு தெரிவிக்குமானால் அமெரிக்கா இந்த இராணுவ கட்டிடங்கள் மீது விமானத்தாக்குதலை இன்று காலை நடத்தும் என நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது

எனினும் இச்செய்தி கற்பனைத்தனமானது என பிரிட்டிஷ். பிரெஞ் இராணுவ ஆய்வாளர்கள் மறுத்துள்ளனர்

திருடிய பசுமாடு பிடிபட்டது

அளவெட்டியில் பசுமாட்டைத் திருடியவர் யாழ்ப்பாணம் பொம்மைவெளி இறைச்சிக்கடையில் அதை இன்னுமொருவருக்கு விற்க முற்பட்ட போது மாட்டுடன் கையும்மெய்யுமாக பிடிக்கப்பட்டு தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார், 07

சைக்கிள் திருடியவர் பிடிபட்டார்

ஆவரங்கால் சிவன் கோவிலில் சைக்கிள் திருட முயன்ற நபர் ஒருவர் அங்கு நின்ற மக்களால் பிடிக்கப்பட்டார்

இந்தக் கோவிலில் சென்ற வியாழக்கிழமை அன்னதானத்துக்கு முன் பூசை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது சைக்கிளைத் திருடி ஓட முயன்ற ஒருவரை அங்கு நின்ற இளைஞர்கள் பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர் 73

அஞ்சலிக் கூட்டம்

கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வடமராட்சி கிழக்கு கடற்புலிப் பிரிவைச் சேர்ந்த மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று திங்கட் கிழமை அம்பன் விளையாட்டரங்கில் நடைபெறும்.

வடமராட்சி கிழக்கு கடற்புலி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அன்பு தலைமையில் இந் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும்

இந்நினைவஞ்சலிக் கூட்டத்தில் புலிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். 10

பங்கீட்டுக்கு மண்ணெண்ணெய்

புலோலி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தினால் பாவனையாளர்களுக்கு பங்கீட்டுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது, 10

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 17 08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது